DEPOSITION OF WITNESS
(Chapter XXV of BNSS)
IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE
KANNIYAKUMARI AT NAGERCOIL

Calendar
Miscellaneous
Preliminary Register
Session Case S.C.No. 243/2024

Prosecution Witness -P.W. 13

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | திரு. ஜாண் பர்னதாஸ் |
| Father's Name | : | K. செல்லக்கண் |
| Village | : | விளவங்கோடு (உண்ணாமலைகடை) |
| Taluk | : | விளவங்கோடு |
| Calling | : | சிறப்பு உதவியாளர் |
| Age | : | 57 |
| Date | : | 24.09.2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.09.2025.

(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர்.)

24.09.2025

**முதல் விசாரணை:-**

நான் தற்போது கடையாலுமூடு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். 26.11.2023 அன்று பளுகல் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். அன்றைய தினம் நான் பணியில் இருந்தபோது பளுகல் காவல் நிலைய குற்ற எண். 94/2023 பிரிவு 302, 380 இ.த.ச. வழக்கின் இறப்பு Intimation, முதல் தகவல் அறிக்கை, அசல் புகார் மனு ஆகியவற்றையும், அவற்றின் நகல்களையும், சம்பந்தப்ட்ட அலுவலகங்களில் துரித

தபால் மூலம் ஒப்படைக்க அலுவல் கொடுக்கப்பட்டு கடவு சீட்டு பெற்று முதலில் குழித்துறை நடுவர் நீதிமன்றம் 1 க்கு சென்று அசலை அவர்களிடமும், அதன் நகல்களை இதர அலுவலர்களிடமும் ஒப்படைத்து நிலையம் வந்தேன். என்னிடம் காட்டப்படும் இறப்பு Intimation அப்போது நான் கொண்டு சென்றதுததான். **அது அ.சா.ஆ. 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. நான் நிலையத்திலிருந்து தபால் கொண்டு சென்றது மாலை சுமார் 4.30 மணி இருக்கும். நீதிமன்றம் செல்லும்போது மாலை சுமார்5.30 மணி இருக்கும். நீதிபதி மீட்டிங் சம்பந்தமாக வெளியூர் சென்றிருப்பதாக அவருடைய உதவியாளரிடமிருந்து கேள்விப்பட்டு, அவர் வரும் வரையில் காத்திருந்து இரவு சுமார் 10.40 க்கு அவர் வீட்டில் வைத்து கொடுத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :-</u>**

நீதிபதி இல்லாத காரணத்தினால் காத்திருந்து இரவு 10.40 மணிக்கு நீதிபதியிடம் முதல் தகவல் அறிக்கையை ஒப்படைந்தேன் என்ற விவரத்தை ஆய்வாளரிடம் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொன்னேன். 4.30 மணிக்கு நான் காவல்நிலையத்திருந்து கிளம்பவும் இல்லை, அப்போது என்னிடம் முதல் தகவல் அறிக்கையோ, புகாரோ ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல இரவு 10.40 மணிக்கு முதல் தகவல் அறிக்கை நீதிபதியிடம் ஒப்படைக்கப்படவில்லை என்றால் சரியல்ல. காவல் நிலையத்திலிருந்து முதல் தகவல் அறிக்கையை எடுத்துக் கொண்டு கிளம்பியதே இரவு 10 மணிக்கு பிற்பாடுதான் என்றால் சரியல்ல. இரவு 9 மணிக்கு மேல்தான் புகார், முதல் தகவல்

அறிக்கை ஆகியவை அவசரகதியில் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டன என்றாலும் அதன்பிறகுதான் இரவு 10 மணிக்கு மேல் அவை என்னிடம் கொடுக்கப்பட்டன என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் ஏற்பட்டுள்ள கால தாமதங்களை நிவர்த்தி செய்வதற்காக தற்போது பொய்யாக 4.30 மணிக்கு தபால் என்னிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும், நீதிபதி இல்லை என்றும் அதனால் 10.40 மணிக்கு அவரிடம் ஒப்படைக்கப்பட்டது என்றும் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.